22.12.2021 சி.சி 44/2007 அ.சா 3 திரு. ஜெயசேகர்

சாட்சி நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

மிடாலக்காடு ஜங்சனில் நான் 2000ம் வருடத்திலிருந்து 2012ம் ஆண்டு வரை மெடிக்கல் கடை நடத்தி வந்தேன். அப்போது 2004ம் வருடம் 4வது எதிரி சுபின் மருத்துவமனை நடத்தி வந்தார். அந்த மருத்துவமனையில் எனது மச்சான் சுதர் வேலைப்பார்க்கவில்லை. நான் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர். 1, 2, 4 எதிரிகள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். அ.சா1, 1வது எதிரியை எத்தனை வருடங்கள் காதலித்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அ.சா1ம் 1வது எதிரியும் பதிவு திருமணம் செய்த விவரம் எனக்குத் தெரியும். அதன் பிறகு நடந்த சங்கதிகள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1வது எதிரியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் 100 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான். 1வது எதிரியின் வீட்டிலிருந்து 100 மீட்டர் கிழக்கு பக்கம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் மிடாலக்காடு ஜங்சன் வரவேண்டும் என்றால் எனது வீட்டை தாண்டி தான் வரவேண்டும். அ.சா1ற்கு குழந்தை பிறந்த விவரம் எனக்குத் தெரியும். நான் குழந்தை பிறந்த பிறகும் அ.சா1ஐ பார்க்க செல்லவில்லை. அ.சா1ன் பிரசவசத்தின் போதும் நான் மருத்துவமனை சென்று பார்க்கவில்லை. எனது சகோதரியான அ.சா1ன் 2 குழந்தைகளுக்கான பிரசவ செலவையும் எதிரிகள் தான் பார்த்தார்கள் என்றால் சரிதான். நான் 1வது எதிரி எனது மெடிக்கல் கடையில் உள்ள போர்டை எடுத்துச்சென்றுவிட்டார் என்று 1வது எதிரி மீது 27.07.2007ம் தேதி புகார் அளித்திருந்தேன். நான் புகார் அளித்ததின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை போடப்பட்டது. அந்த வழக்கின் குற்ற எண் எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் கொடுத்த புகார் பொய்யானது என்று கருங்கல் காவல்நிலையத்தில் முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான்சொன்னது உண்மையானதாக இருந்தால் நான் கொடுத்த புகாரினை பதிவுச் செய்து போலீசார் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருப்பார் என்றால் சரியல்ல. அ.சா1 எங்களது விருப்பத்திற்கு மாறாக 1வது எதிரியை திருமணம் செய்ததால் எங்களுக்குள் மனஸ்தாபம் உண்டு என்றால் சரியல்ல. 1வது எதிரி எனது மூத்த சகோதரியான ஏஞ்சலா மேரியிடம் அவரது வீட்டிற்குச் சென்று கூடுதல் வரதட்சணை கேட்ட விவரம் எனது போலீசார் விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் அரசு வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான். 1ம் எதிரியின் குடும்பத்திற்கு அடுத்தவர்களை எதிர்பார்க்காமல் குடும்பம் நடத்தக்கூடிய போதிய வசதிகளும், வருமானங்களும் உண்டு என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு எனது சகோதரியான அ.சா.1ற்கு எதிரிகள் தாலிச்செயினும், வளையல் உள்ளிட்ட நகைகளும் செய்துக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எதிரியின் வீட்டில் சம்பவம் ஏதேனும் நடைபெற்றால் எனது வீட்டிற்கு தெரிய வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு முன்புஎதிரிகள் எனது சகோதரியான அ..சா1ஐ அடித்து கொடுமைப் படுத்தி வரதட்சணை கேட்டது சம்மந்தமாக கருங்கல் காவல்நிலையத்தில் 07.06.2006 அன்று எனது சகோதரி புகார் அளித்திருந்தார். என்னிடம் போலீசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள். 07.06.2006ம் தேதியில் கருங்கல்

காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்ட விவரத்தை நான் இந்த வழக்கில் போலீசார் என்னை விசாரிக்கும் போது சொல்லவில்லை. மேற்படி புகார் கொடுத்ததற்கான ஆதாரம் எதையும் இந்த வழக்கில் சமர்ப்பிக்கவில்லை. எனது சகோதரியின் திருமணத்தில் இருந்து 2007ம் வருடம் வரை எதிரிகள் எனது சகோதரியை கொடுமை படுத்தியது சம்மந்தமாக நானோ எனது சகோதரியோ குளச்சல் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் 2006ம் வருடம் எனது சகோதரி புகார் அளித்தார். 2006ம் வருடம் டிசம்பர் மாதத்தில் புகார் அளிக்கப்பட்டது. மேற்படி விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். 4வது சுபின் மருத்துவர். 12.12.2006ம் தேதி நான் கடையில் இருந்தேன். 12.12.2006ம் தேதி 4வது எதிரி எனது வீட்டில் வந்து மிரட்டவில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சம்பவங்கள் எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 2006ம் வருடத்திற்கு பின்பு நடந்தவை எல்லாம் எனக்குத் தெரியும். வழக்கு சம்பவம் எனக்கு அ.சா1 சொன்னதின் பேரில் தெரியும். எனது வீடு மட்டுபாவு வீடு. படிக்கட்டுகள் உண்டு. அ.சா1 நிலைதடுமாறி விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் 1வது எதிரிக்கும் உள்ள தனிப்பட்ட விரோதத்தை மனதில் வைத்து அ.ச1ஐ பகடைகாயாக்கி எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கும்போது எனது மூத்த சகோதரி ஏஞ்சல் ராணியிடம் எதிரி எந்த தேதியில் சென்று கூடுதல் வரதட்சணை பணம் கேட்டார் என்று நான் சொல்லவில்லை. எனது தூண்டுதலின் பேரில் அ.சா1 ஆல் எதிரிகளின் மீதுஇந்த புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையிலேயே 2005ம் வருடத்திலிருந்து 2007ம் வருடத்திற்குள் ஏதாவது சம்பவம் நடந்திருந்தால் அது சம்மந்தமாக புகார் அளித்திருப்பார்கள் என்றால் புகார் அளித்துள்ளோம். நான் உண்மைக்கு மாறாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ERANIEL.

Calendar	}	CC 44/2007
Miscellaneous	}	
Preliminary Register	}	
Sessions	}	

Deposition of witness for	{	Prosecution PW. 4
	{	Respondent
	{	Court

Name : திரு. சதாரன்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of
the day of 22.12.2021

<u>முதல் விசாரணை</u>:

நான் இரவிபுதூர்கடையில் வசித்து வருகிறேன். நான் நடத்துனராக வேலைச் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். எதிரிகளைத் தெரியும். அ.சா1 எனது மனைவியின் தங்கை. அ.சா3 எனது மனைவியின் அண்ணன். 07.06.2007ம் தேதி அ.சா1க்கும் 1வது எதிரிக்கும் ஏற்கனவே பிரச்சினை ஆகி கருங்கல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். பின்னர் சேர்ந்து வாழ்ந்தார்கள். பின்னர் திரும்பவும் பிரச்சினையாகி 2006ம் வருடம் டிசம்பர் மாதத்தில் 1வது எதிரி எனது வீட்டிற்கு வந்து தொழில் செய்வதற்காக வண்டி வாங்க ரூபாய் 50,000 எனது மனைவியின் அப்பாவிடம் வாங்கி தருமாறு கேட்டார். நான் வாங்கி தரமாட்டேன் என்று சொன்னேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு திருமணம் 1988ம் வருடம் நடைபெற்றது. எனக்கு 3 பெண் பிள்ளைகள் உண்டு. நான் திருமணத்தின் போது ஏதாவது தேவை ஏற்பட்டால் தான் எனது மாமனார் வீட்டிற்கு வருவேன். 07.06.2007ம் தேதி புகார் அளித்த விவரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொன்னேன். 1வது எதிரி என்னிடம் ரூபாய் 50,000 வாங்கி தரச் சொன்னதை எனது மாமனாரிடமும், மச்சானிடமும் சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை வேறு எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா3ன்

தூண்டுதலின் பேரில் அ.சா1 அளித்த புகாரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.சா3 சொல்லி தந்ததை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.